மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

3—

சார்நிலைக் கருவூலம்

•12591—திரு. கா.பூ. முனுசாமி:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டினத்தில் சார்நிலைக் கருவூலம் தொடங்க அரசு முன்வருமா?

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி வருவாய் வட்டத்தில், காவேரிப்பட்டினம், ஊராட்சி ஒன்றியமாக இயங்கி வருகிறது. காவேரிப்பட்டினம் ஒரு வட்டத் தலைமையகமாக இல்லை. இந்நிலையில், மேலும் ஆய்வு செய்ததில், அங்கு ஒரு சார்நிலைக் கருவூலம் தொடங்கப்பட்டால், குறைந்த நிலை பணிப் பளு—work load இருக்குமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவற்றைக் கருத்திற்கொண்டு, தற்போது காவேரிப்பட்டினத்தில் சார்நிலைக் கருவூலம் அமைக்க எந்தச் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம், வளர்ந்து வருகின்ற நகரம். மேலும், அங்கே சிறு தொழில் முனைவோர்கள் அதிகமாக உள்ளனர். அதிகமான அரசு அலுவலகங்களும் உள்ளன. மேலும், பென்ஷன்தாரர் சங்கமும் என்னிடத்திலே வந்து அங்கே ஒரு சார்நிலைக் கருவூலம் கொண்டுவர வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருவூலத்தால் பயன்பெறும் அரசு ஊழியர்களின்

2005 பிப்ரவரி 2]

எண்ணிக்கை 750 மட்டுமே இருக்கின்ற காரணத்தினால், போதிய work load அங்கு இருக்காது எனக் கணக்கிடப்பட்டதால், இது பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை வேறு எந்த அடிப்படையில் அணுகலாம் என்று அரசு பரிசீலித்து, தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

4—

தொழில்நுட்பப் பூங்கா

***22541—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை நகரில் இரண்டாவது தொழில்நுட்பப் பூங்காவை அமைக்க அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்; நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே ஒரு சிறிய தவறு இருப்பதாக நான் உணர்கிறேன். கோவை நகரில் இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா என்று சொன்னால், ஏதோ முதல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று கோவையிலே இருக்கிறது என்று வரும். தற்போது, அங்கே இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா வேண்டுமென்று நான் கோருவதாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சென்னைக்கே இரண்டாவது தொழில்நுட்பப் பூங்கா இன்னும் வரவில்லை. ஆக, கோவையைப் பொறுத்தமட்டிலே, ஒரு தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் அங்கே இருக்கின்றன...